## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

⇒ தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்கள்.

⇒ அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் குறைந்த அடிகளில் (4 அடிகளுக்கு) மிகாமல் உரைப்பது.

⇒ பதினெண்கீழ்க்கணக்கு என்னும் வழக்கை கொண்டு வந்தவர்கள் மயிலைநாதர் மற்றும் பேராசிரியர்.

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி

அறம் பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்

திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்.

**–பன்னிருபாட்டியல்**

மேற்கண்ட பாடல் அடிகள் கீழ்க்கணக்கு நூல்களின் இலக்கணம் பற்றி கூறுகிறது.

**கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய பாடல்**

**“நாலடிநாண்மணி நாநாற்பது ஐந்திணை முப்**
**பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்**
**இந்நிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே**
**கைநிலைய வாம் கீழ்க்கணக்கு”**

⇒ **நீதி நூல்கள் 11**

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. திரிகடுகம்
7. ஆசாரக்கோவை
8. பழமொழி நானூறு
9. சிறுபஞ்சமூலம்
10. ஏலாதி
11. முதுமொழிக்காஞ்சி

⇒ **அகத்திணை நூல்கள் 6**

1. ஐந்திணை ஐம்பது
2. திணைமொழி ஐம்பது
3. ஐந்திணை எழுபது
4. திணை மாலை நூற்றைம்பது
5. கைந்நிலை
6. கார்நாற்பது

⇒ **புறத்திணை 1 + 1**

- களவழிநாற்பது
- இன்னிலை

| வ. எண் | நூல் பெயர் | பாடல் எண்ணிக்கை | பொருள் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 1. | நாலடியார் | 400 + 1 | நீதி | சமண முனிவர்கள் |
| 2. | நான்மணிக்கடிகை | 106 | நீதி | விளம்பி நாகனார் |
| 3. | இன்னா நாற்பது | 40 + 1 | நீதி | கபிலர் |
| 4. | இனியவை நாற்பது | 40 + 1 | நீதி | பூதஞ்சேந்தனார் |
| 5. | திரிகடுகம் | 100 | நீதி | நல்லாதனார் |
| 6. | ஏலாதி | 80 | நீதி | கனிமேதாவியார் |
| 7. | முதுமொழிக்காஞ்சி | 100 | நீதி | கூடலூர் கிழார் |
| 8. | திருக்குறள் | 1330 | நீதி | திருவள்ளுவர் |
| 9. | ஆசாரக்கோவை | 100 | நீதி | பெருவாயின் முல்லியார் |
| 10. | பழமொழி நானூறு | 400 + 1 | நீதி | முன்றுறை அரையனார் |
| 11. | சிறுபஞ்சமூலம் | 97 | நீதி | காரியாசனார் |
| 12. | ஐந்திணை ஐம்பது | 50 + 1 | அகம் | மாறன் பொறையனார் |
| 13. | ஐந்திணை எழுபது | 70 | அகம் | மூவாதியர் |
| 14. | திணைமொழி ஐம்பது | 50 | அகம் | கண்ணன் சேந்தனார் |
| 15. | திணை மாலை நூற்றைம்பது | 150+3 | அகம் | கணிமேதாவியர் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | கைநிலை | 60 | அகம் | புள்ளங்காடனார் |
| 17. | கார் நாற்பது | 40 | அகம் | கண்ணன் கூத்தனார் |
| 18. | களவழி நாற்பது | 40+1 | புறம் | பொய்கையார் |
| 19. | இன்னிலை | 45+1 | புறம் | பொய்கையார் |

| | |
|---|---|
| நீதி நூல்களுள் சிறியது | இன்னா நாற்பது |
| நீதி நூல்களுள் பெரியது | திருக்குறள் |
| அக நூல்களுள் சிறியது | கார்நாற்பது |
| அக நூல்களுள் பெரியது | திணைமாலை 150 |
| இரட்டை நூல்கள் | இன்னா நாற்பது, இனியவை நாற்பது |
| எண்கள் பெயரால் அமைந்த நூல்கள் | திரிகடுகம், நாண்மணிகடிகை, சிறுபஞ்சமூலம் |

| நூல் வகை | நூல்களின் பெயர் |
|---|---|
| ஒருமறை நூல் | திருக்குறள் |
| இரு நானூறு நூல்கள் | நாலடியார், பழமொழி நானூறு |
| மும்மருந்து நூல்கள் | திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி |
| மணிமொழிக் கோவை நூல்கள் | நாண்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை |
| நான்கு நாற்பது நூல்கள் | இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது. |
| இரு ஐம்பது நூல்கள் | ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது |
| ஒரு எழுபது நூல்கள் | ஐந்திணை எழுபது |
| ஒரு நூற்றைம்பது | திணைமாலை நூற்றைம்பது |
| ஒரு நிலை | கைந்நிலை |

**நாலடியார்**

- சமண முனிவர்கள் நானூறு பேர் பாடிய நானூறு வெண்பாக்களை கொண்ட இந்நூல், திருக்குறளோடு ஒப்புமைப்படுத்தி பாராட்ட பெரும் சிறப்புடையது.
- ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, என்பதனாலும், ‘சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது’ என்பதனாலும், ‘பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில், என்பதனாலும் இதன் பெருமையை அறியலாம்.
- திருக்குறளைப் போலவே நாலடியாரும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளாக உள்ளது.
- நாலடியார் பாடல்களைப் பால், இயல், மற்றும் அதிகாரமாக வகுத்தவர் பதுமனார். இவரே இதற்கு உரையும் எழுதியுள்ளார் என்பர்.
- இந்நூலை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

| | |
|---|---|
| அறத்துப்பால் | 130 பாடல்கள் |
| பொருட்பால் | 260 பாடல்கள் |
| காமத்துப்பால் | 10 பாடல்கள் |
| மொத்தம் 400 பாடல்கள் + கடவுள் வாழ்த்து பாடல் 1 | |
| இந் நூலின் வேறு பெயர்கள் நாலடி நானூறு வேளாண் வேதம். | |

**நான்மணிக்கடிகை**

- இந்நூலை இயற்றியவர் விளம்பி நாகனார்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ❖ மணியான 4 சிறந்த கருத்துக்களை ஒவ்வொரு பாடலும் விளக்குகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீடு பேற்றினை அடைய ஒவ்வொருவரும் முயல வேண்டும் என்பது இந்நூல் ஆசிரியர் கருத்து.
- ❖ இந்நூலின் கடவுள் வாழ்த்துடன் சேர்த்து 106 பாடல்கள் உள்ளன.
- ❖ மதிமன்னு மாயவன் வாள்முகம் ஒக்கும் என தொடங்கும் கடவுள் வாழ்த்து திருமாலை புகழ்ந்துரைக்கின்றது, எனவே இவர் வைணவ மதித்தனர் என்று கருதப்படுகிறது.
- ❖ இவரது இயற்பெயர் நாகனார் இவரது ஊரின் பெயர் விளம்பி.

**இன்னா நாற்பது**

- ❖ இதன் ஆசிரியர் கபிலர் ஆவார்.
- ❖ வாழ்க்கைக்கு துன்பம் தருபவை இவை இவை எனக் கூறுகின்ற இந்நூல் கடவுள் வாழ்த்துடன் சேர்ந்து 41 பாடல்களை உடையது.
- ❖ தொல்காப்பியர் கூறிய அம்மை என்ற வனப்பு முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

**இனியவை நாற்பது**

- ❖ இதன் ஆசிரியர் பூதஞ்சேந்தனார்
- ❖ இந்நூலின் ஆசிரியர் மதுரை
- ❖ தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்.
- ❖ இவரது தந்தையார் மதுரை தமிழாசிரியர் பூதன்.
- ❖ இவர் வாழ்ந்த நாடு பாண்டியநாடு.
- ❖ இவர் சிவன், திருமால், நான்முகன் ஆகிய மூவரையும் பாடியுள்ளார். எனவே சர்வமைய நோக்குடையவராய் இருந்திருக்க வேண்டும்.
- ❖ கடவுள் வாழ்த்துடன் சேர்த்து 41 வெண்பாக்களை உடையது. ஒவ்வொரு பாடலும் இனிய அறிவுரைகளை கூறுகின்றது.
- ❖ இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 செய்யுள்களைக் கொண்டது. இந்நூலில் எட்டாவது பாடல் (ஊரும் கலிமா உரனுடைமை எனத் தொடங்கும்) மட்டுமே பற்றுடைய வெண்பாவாகும். ஏனைய அனைத்தும் இன்னிசை வெண்பாவினால் ஆக்கப்பட்டுள்ளன.
- ❖ இந்நூலில் பாடல் 1,3,4,5 ஆகியவை மட்டுமே நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறுகின்றன. ஏனைய அனைத்தும் மும்மூன்று இனிய பொருள்களை கூறுகின்றன.
- ❖ இந்நூலின் கடவுள் வாழ்த்தில் ஆனைமுகனை போற்றும் வரிகள் அமைந்துள்ளதால் கடவுள் வாழ்த்து பாடல் மட்டும் பிற்சேர்க்கையாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

**திரிகடுகம்**

- ❖ இதனை இயற்றியவர் நல்லாதனார் சுக்கு மிளகு திப்பிலி ஆகிய பொருள்களால் ஆகிய மருந்து உடல் நோயை போக்குவது போல் இந்நூல் பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப் பெறும் மூன்று கருத்துகளும் நம் உள்ளத்தில் ஏற்படும் நோயை போக்கும் தன்மை உடையன.
- ❖ காப்பு செய்யுள் விடுத்து 100 பாடல்கள் உள்ளன.
- ❖ காப்பு செய்யுளில் காயாம் பூவை போன்ற கரிய நிறமுடைய பெருமாளின் திருவடிகள் என்று பாடப்பட்டுள்ளதால் இந்நூல் ஆசிரியர் வைணவ மதித்தனர் என்று குறிக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த திருத்து என்னும் ஊறினர் என்பர்.
- ❖ இவரை 'செருஅடுதோள் நல்லாதன்' எனப் பாயிரம் குறிப்பிடுவதனால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**ஆசாரக்கோவை**

- இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார்.
- அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கத்தை எடுத்துரைக்கிறது.
- இது 100 பாடல்களை உடையது கடவுள் வாழ்த்து செய்யுள் இடம் பெறவில்லை

**பழமொழி நானூறு**

- இதனை இயற்றியவர் முன்றுறை அரையனார்.இவர் முன்றுறை என்ற நாட்டின் மன்னர் என்பது அரையன் என்பதனால் விளங்குகிறது.
- இந்நூலின் தற்சிறப்பு பாயிரத்திலும் முன்றுறை மன்னவன் நான் கடியும் செய்தமைத்தான் என்று எழுதப்பட்டுள்ளது.
- தற்சிறப்பு பாயிரமும் கடவுள் வணக்கமும் சேர்த்து மொத்தம் 401 பாடல்கள் உள்ளன.
- முன்னுரை அரையனார் சமணர் ஆவார்.
- ஒவ்வொரு பாட்டிலும் ஒரு பழமொழியை கூறுவதால் பழமொழி நானூறு என்று பெயரை பெற்றது.
- இந்நூல் வரலாற்று குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.
- இந்நூலின் தற்சிறப்பு பாயிரத்தில் பிண்டியின் நீழல் பெருமான் என்று தொடங்கும் பாடல் மூலம் இந்நூல் ஆசிரியர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என அறிய முடிகிறது.
- இந்நூல் பண்டை தமிழ் மன்னர்களின் வரலாற்று குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

**சிறுபஞ்சமூலம்**

- இதனை இயற்றியவர் காரியாசான் இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகியவற்றின் வேர்கள் சேர்ந்து மருந்தாகி நோய் தீர்க்கும்.
- இது போலவே இந்நூல் பாடல் ஒவ்வொன்றிலும் அமைந்த ஐந்தைந்து அரிய கருத்துக்கள் ஒவ்வொருவரின் கடமைகளை கூறுகின்றன.
- கடவுள் வாழ்த்துடன் சேர்த்து 97 பாடல்கள் உள்ளன.
- இவரும் கணித மேதாவியாரும் ஒரு பாடசாலை மானக்கராவார்.

**ஏலாதி**

- இதனை இயற்றியவர் கணித மேதாவியார்.
- தற்சிறப்பு பாயிரம் மற்றும் கடவுள் வணக்கம் ஆகியவற்றை தவிர்த்து 80 பாடல்கள் உள்ளன.
- 1:2:3:4:5:6. என்ற விகிதத்தில் கலக்கப்பட்ட ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்ற ஆறு வகை பொருட்களால் ஆன மருந்து ஏலாதி.
- இம்மருந்து உடல் நோயை நீக்குவது போல இவற்றில் உள்ள பாடல்கள் மக்களின் அறியாமையை நீக்கும் தன்மை உடையன.
- ஒவ்வொரு பாடலும் ஆறு கருத்துக்களை கொண்டுள்ளது.
- அருகனுக்கு வணக்கம் சொல்லி நூலைத் தொடங்குவதால் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியப்படுகிறார் காலம் கிபி ஐந்தாம் நூற்றாண்டு.

**ஐந்திணை ஐம்பது**

- இதனை இயற்றியவர் மாறன் பொறையனார்
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஒவ்வொரு திணைக்கும் பத்து பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கும் 50 பாடல்களைக் கொண்டு திகழ்கிறது.



www.tnpscgroup4.in

- நூற்பாயிரம் தனிப்பாடலாக விளங்குகிறது.
- இதனை படிக்காதவர்கள் செந்தமிழ் இன்பத்தை நுகராதவர் என்று நூறு பாயிரம் கூறுகின்றது.
- ‘ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார் செந்தமிழ் சேராதவர்.’
- முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற வைப்பு முறையில் அமைந்துள்ளது.

**திணைமொழி ஐம்பது**

- இதனை இயற்றியவர் கண்ணன் சேந்தனர்.
- திணை ஒன்றுக்கு பத்து பாடல்களாக 5 திணைகளுக்கும் 50 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் கடவுள் வாழ்த்து செய்யுள் காணப்படவில்லை.
- திணை வைப்பு முறையில் மாறுபட்டு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- அகப்பொருள் பற்றி கூறும் சிறந்த நூல் இது.
- பாடல்கள் அனைத்தும் சொல்லலகும், பொருள்அழகும் கொண்டு விளங்குகின்றன.

**ஐந்திணை எழுபது**

- இந்நூல் ஆசிரியர் மூவாதியார்.
- ஐந்து திணைகளை பற்றிய 70 பாடல்களைக் கொண்டுள்ளது கடவுள் வாழ்த்து தனிப்பாடல் ஆக விளங்குகின்றது.
- ஒவ்வொரு பாடலும் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை பற்றிய ஓர் அரிய உண்மையை எடுத்துரைக்கிறது.
- ஐந்திணை எழுபதில் ஒவ்வொரு திணைக்கும் 14 பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் 70 பாடல்கள் என வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் நூலில் 66 பாடல்களை உள்ளன ஏனையவை கிடைத்தில.
- இந்நூலாசிரியர் கிபி ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்தவர். ஆனால் கடவுள் வாழ்த்தில் விநாயகப் பெருமானை போற்றி பாடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிபி ஏழாம் நூற்றாண்டுக்கு பிறகு விநாயகர் வழிபாடு ஆரம்பித்தது எனவே கடவுள் வாழ்த்து பிற்ச்சேர்க்கையாக இருக்கலாம் என கருதப்படுகிறது.
- திணை மாலை நூற்றைம்பது
- ஏலாதி எழுதிய ஆசிரியர் கணித மேதாவியரே இந்நூலையும் இயற்றியுள்ளார்.
- இயற்கை அழகை இனிதே இந்நூல் கூறுகின்றது.
- இந்நூலில் 153 பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்து செய்யுள் இடம்பெறவில்லை.
- அளகம், வகுளம், பாலிகை, சாலிகை சுவர்க்கம் போன்ற வடமொழி சொற்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**முதுமொழிக்காஞ்சி**

- இந்நூலை இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார்.
- நீதி நூல்களில் மிகச் சிறிய நூல் இதுவே பத்து பத்துகளாக பாக்கள் அமைந்துள்ளன.
- ஒவ்வொரு பத்திலும் பத்தடிகள் வீதம் 100 அடிகள் கொண்டது இந்நூல்.
- ஒவ்வொரு பத்தின் முதல் அடியும் ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம் என்று தொடங்குகிறது.
- சிறந்தப்பத்து,
- அறிவுப்பத்து,


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- பழியாப்பத்து,
- துவ்வாப்பத்து,
- அல்லப்பத்து,
- இல்லைப்பத்து,
- பொய்ப்பத்து,
- எளியப்பத்து,
- நல் கூர்ந்தப்பத்து
- தண்டாப்பத்து என பத்து பிரிவுகள் உள்ளன.
- இந்நூல் ஆசிரியர் பிறந்த ஊர் கூடலூர். சங்ககாலத்திற்கும் பின் வாழ்ந்தவர் இவரின் பாடல்களை நச்சினார்கினியர் முதலிய உரையாசிரியர்கள் மேற்கோள்களாக கையாண்டு உள்ளனர்.
- கைந்நிலை
- இதனை ஏற்றியவர் புல்லங்காடனார்.
- இதன் மற்றொரு பெயர் ஐந்திணை அறுபது ஆகும்
- ஒவ்வொரு திணைக்கும் 12 பாடல்கள் வீதம் 60 பாடல்கள் அமைந்துள்ளன.
- இந்நூல் ஆசிரியர் பாண்டிய மன்னரால் ஆதரிக்கப்பட்டவர்
- தாரா, உத்தரம், பாசம், ஆசை, இரக்கம், இடம், போன்ற வடமொழி சொற்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.
- கார் நாற்பது
- இதனை இயற்றியவர் மதுரை கண்ணன் கூத்தனார்.
- கடவுள் வாழ்த்து செய்யுள் காணப்படவில்லை. இந்நூல் 40 பாடல்களை உடையது.
- அகப்பொருள் பற்றிய இந்நூல் கார்கால நிகழ்ச்சிகளை அழகுற கூறுகிறது.
- அரசன் பொருட்டு போர்க்கடமை ஆற்ற தன் காதலியை பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்த கார்காலம் வந்தும் திரும்பாததினால், பிரிவாற்றாமல் தலைவி வருந்தினாள்.
- தோழி அவளுக்கு ஆறுதல் கூறுவதாகவும், தலைவன் தலைவியை விரைவில் சென்றடைய தேர்பாகனை நோக்கி விரைந்து தேரைசெலுத்துமாறு கூறுவதாகவும், நாடக பாங்கில் இந்நூல் அமைந்துள்ளது.
- களவழி நாற்பது
- இதனை இயற்றியவர் பொய்கையார்
- இந்நூலில் 41 பாடல்கள் காணப்படுகின்றன
- சோழன் செங்கனானுடன் கழுமலம் என்ற இடத்தில் நடந்த போரில் தம் நண்பர் சேரமான் கணைக்காலிரும்பொறை தோல்வியுற்று சிறைப்பட, இந்நூலை பாடி சேரமானை சோழனிடமிருந்து பொய்கையார் மீட்டார் என்பது வரலாறு.
- போர்க்கள கொடுமைகளை இந்நூலில் வர்ணித்துள்ளார் புலவர்.
- இன்னிலை
- இதனை இயற்றியவர் பொய்கையார்
- அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீடுபேரு பால் என்று நான்கு பகுதிகளாக உள்ளது.
- கடவுள் வாழ்த்தை தவிர்த்து 45 பாடல்கள் உள்ளன.
- பண்டைக் காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்று கூறப்படவில்லை. கீழ்க்கணக்கு நூல்கள், மேற்கணக்கு நூல்கள் இன்றே வழங்கப்பட்டு வந்தன.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 18 நூல்கள் அமைந்தமையால் பின்னர் வந்த தமிழறிஞர்கள் பதினெண் என்ற சொல்லை சேர்த்தனர்.
- கீழ்க்கணக்கு என்பதன் பொருள் குறைந்த அடிகளை கொண்ட வெண்பாக்களால் அறம், பொருள், இன்பம் பற்றி 50 முதல் 500 செய்திகளை கொண்டு ஏற்றப்படுவது என்பதாகும்.
- 'நாலடி நாண்மணி நானாற்ப தைத்திணைமுப் பால்கடுகங் கோவை பழமொழி – மாமூலம் இன்னிலை சொல் காஞ்சியுட மேலாதி யென்பவே கைநிலைய வாங்கில் கணக்கு.'
- கீழ்கணக்கு நூல்களில் பொய்கையார் எழுதிய பாடல்கள் கிடைக்கப்பெறமையால் கிடைத்த 18 நூல்களை கொண்டு பதினெண் கீழ்க்கணக்கு என்று நூலை வடிவமைத்தனர்.
- பின்னர் சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழறிஞருமான, திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் ஒரு புலவரிடம் கிடைக்கப்பெற்ற ஏடுகளில் 'இன்னிலை' பாடல்களை கண்டறிந்து அதற்குத்தானே பதிப்புரை எழுதி, திரு.எஸ். வையாபுரி பிள்ளை அவர்களின் துணையோடு அந்நூலை வெளியிட்டார்.
- பின்னர் பலவிதமான சர்ச்சைகளுக்கு இடையே அந்நூல் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக சேர்க்கப்பட்டது. 'வர்த்தமான பதிப்பகம்' கீழ்க்கணக்கு நூல்கள் ஒன்றாக இந்நிலையை (45 பாடல்கள்) சேர்த்து வெளியிட்டுள்ளது.
- ஆ.சிங்காரவேலு முதலியார் எழுதி வெளியிட்டுள்ள 'அபிதான சிந்தாமணியில்' 1022 ஆம் பக்கத்தில் கீழ்க்கணக்கு நூல்களில் 18 நூல்களையும் குறிப்பிட்டு விட்டு, திணையைப் பற்றிய மற்றொரு நூல் இருத்தல் வேண்டும் அதன் பெயர் தெரியவில்லை என்று எழுதியுள்ளார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in